பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 06 புதன்கிழமை 19.01.2022 கதிர் 302

## ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு

ரயிலில் மோதுண்டு நபர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுத்துறை ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

☞2

# கட்டுவனில் தமிழ் மக்களின் நிலத்தை அபகரித்து படையினர் வீதி அமைப்பு

## கோட்டாவின் பொய் பித்தலாட்டம் அம்பலம் என்கின்றார் சுமந்திரன்



(ந.லோகதயாளன்)

வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் வசமுள்ள தமிழ் மக்களின் நிலம் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் உரையாற்றி சில மணி நேரத்தில் கட்டுவனில் தமிழ் மக்களின் நிலத்தை அபகரித்து படையினர் வீதி அமைக்கின்றனர். இந்த நடவடிக்கை ஜனாதிபதியின் பொய் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்துகின்றது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

☞2

## முகமாலையில் மனித எச்சம்!

கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மனித எச்சம் ஒன்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார், கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவானுக்கு தகவல் வழங்கினர்.

குறித்த பகுதிக்கு இன்று வருகை தந்த ☞2

## கைக்குண்டு மீட்பு தொடர்பில் மேலுமொரு சந்தேகநபர் கைது

கொழும்பு, பொரளையிலுள்ள தேவாலயம் ஒன்றில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில், பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த மேலுமொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

ஓய்வுபெற்ற வைத்தியர் ஒருவரே ☞2

## கிணற்றில் தவறி விழ்ந்து கரணவாயில் சிறுமி சாவு

சிறுமி ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

யாழ்., வடமராட்சி, கரணவாய், அண்ணாசிலையடிப் பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

☞2

## உணவுத் தட்டுப்பாடு குறித்து வீண் அச்சம் கொள்ளாதீர்கள்

### அமைச்சர் ரமேஷ் கூறுகின்றார்



இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு தொடர்பில் வீண் அச்சம் கொள்ள வேண்டியதில்லை என்று அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு இன்று நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

உரப்பிரச்சினையால் உற்பத்தி ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளது. அது நிவர்த்தி செய்யப்படும். அத்துடன், தட்டுப்பாடு ஏற்படாத வகையில் இறக்குமதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சீனாவிடம் இருந்து நன்கொடையாக அரிசி கிடைக்கவுள்ளது.

மறுபுறத்தில் வீடுகளில் மரக்கறி உள்ளிட்டவற்றை உற்பத்தி செய்யும் நடவடிக்கையும் ☞2

## சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் தங்கம் வென்ற முல்லைத்தீவுப் பெண்



பாகிஸ்தானில் இடம்பெறும் சர்வதேச குத்துச் சண்டைப் போட்டியில் பங்குகொண்ட முல்லைத்தீவு யுவதியான கணேஷ் இந்துகாதேவி தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு புதியநகர் கிராமத்தில் தந்தையை இழந்த நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்து குத்துச் சண்டையில் சாதித்து வரும் கணேஷ் இந்துகாதேவி சர்வதேசப் போட்டியில் பங்குகொள்ளத் தெரிவாகி பாகிஸ்தான் சென்றிருந்தார்.

இந்நிலையில், நேற்று பாகிஸ்தான் லாகூரில் இடம்பெற்ற 25 வயதுக்குட்பட்ட 50 - 55 கிலோகிராம் எடைப் பிரிவின் குத்துச்சண்டைப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் பெருமை தேடித் தந்துள்ளார்.

இவரைப் பல்வேறு தரப்பினரும் பாராட்டி வருகின்றனர்.

## நாடாளுமன்றத்தில் 4 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின்போது நால்வருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற ஊழியர், ஊடகவியலாளர், நடனக் குழுவின் கலைஞர் உள்ளடங்கலாக நால்வருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ☞2

## மனைவி, மாமியார் தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

மனைவி, மாமியாரின் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்தர் மரணமான சம்பவம் குருவிட்ட கந்தலந்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின்போது 35 வயதான குறித்த நபரை அசிட் வீசியும் பொல்லால் அடித்தும் கொலை செய்துள்ளனர் என்று குருவிட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலின்போது படுகாயமடைந்த நபர் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் ☞2

## கைக்குண்டு மீட்பு தொடர்பில் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு கொழும்பு, தெற்கு பிரிவின் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## கிணற்றில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
16 வயதான ஜெகன் கஜனிகா என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி வீட்டில் வளர்க்கப்படும் ஆட்டுக்குக் குழை வெட்டுவதற்காக கிணற்றுக்கட்டில் ஏறி நின்று பூவரசம் குழை வெட்டியபோது அவர் கிணற்றில் தவறி விழுந்துள்ளார்.

இதையடுத்து அவர் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## உணவுத் தட்டுப்பாடு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆரம்பமாகியுள்ளது. அரச தரப்பிலும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, உணவு தட்டுப்பாடு தொடர்பில் வீண் அச்சம்கொள்ள வேண்டியதில்லை -என்றார்.

## நாடாளுமன்றத்தில் 4 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஆரம்ப மான நிலையில், நாடாளுமன்றத்துக்கு வருகை தந்தவர்கள் அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போதே நால்வருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

நேற்று நாடாளுமன்றத்தில், ஜனாதிபதிக்கு விசேட வரவேற்பளிக்கப்பட்டது. இதன்போது வரவேற்பு நடனமும் இடம்பெற்றது.

## மனைவி, மாமியார் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சேர்க்கப்பட்ட பின் மரணமடைந்துள்ளார்.

சம்பவத்தையடுத்து உயிரிழந்த நபர் மீது தாக்குதல் நடத்திய மனைவியும் மனைவியின் தாயாரும் குருவிட்ட பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மரணமடைந்தவர் குடிக்கு அடிமையாகி மனைவியை அடித்துத் துன்புறுத்துபவர் என்றும், இவருக்கு எதிராக மனைவியால் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவ தினம் இவர் குடித்துவிட்டு தாக்குதல் நடத்த முற்பட்டபோது, தற்பாதுகாப்புக்காக இந்தத் தாக்குதல் இடம்பெற்றது என்றும் இவரது மனைவியும் மாமியாரும் பொலிஸ் நிலையத்தில் வாக்கு மூலம் வழங்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை குருவிட்ட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் சில தினங்களுக்கு முன்னர் எம்பிலிப்பிட்டிய பனாமுர பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட நபர் வழங்கிய தகவலுக்கமைவாகவே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## முகமாலையில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிளிநொச்சி மாவட்ட நீதிவான் அந்தப் பகுதியைப் பார்வையிட்டார்.

இதையடுத்து நீதிவானின் அனுமதியுடன் இன்று குறித்த பகுதியில் மேலும் அடையாளப்படுத்தபட்ட இடங்களில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுவனில் தமிழ் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்றைய நாடாளுமன்ற சம்பிரதாய உரையில் இந்த நாட்டின் ஜனாதிபதி நான்தான் என்பவர் கூறுகின்றார் மக்களின் நிலங்கள் விடுவிக்கப்படும் என. ஆனால், அன்றைய தினமே கட்டுவன் மயிலிட்டி வீதியில் வெறும் 400 மீற்றர் நீளமும் 26 மீற்றர் அகலமும் கொண்ட நிலத்தைக்கூட விடமாட்டோம் எனப் படையினர் அடாத்தாக வீதி அமைக்கின்றனர்.

அவ்வாறெனில் இந்த நாட்டிலே ஜனாதிபதியின் சொல்லைக்கூட மதிக்காத இராணுத்தினர் இருக்கின்றனர் எனத் தெரிகின்றது. படைத் தரப்பு நேற்றும் இன்றும்அவசர அவசரமாகஆக்கிரமித்து வைத்திருக்கும் பகுதியில் டோசர்கள், டிப்பர் வாகனங்கள் மூலம் வீதி அமைக்கின்றனர்.

அந்த வீதியமைப்பு தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபை வாய் மூடியுள்ளது.

சட்ட விரோதமாக அமைக்கப்படும் வீதி தொடர்பில் இதுவரை எந்த அதிகாரிகளும் வாய் திறக்காதமையால் உரியவர்கள் வழக்குத் தாக்கல் செய்ய என்னை நாடுகின்றனர். இதுதான் இந்த நாட்டின் நிலைமை என்பதனை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

## ரயிலில் மோதுண்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு உயிரிழந்தவரின் பெயர் விவரங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. அளுத்கமையிலிருந்து மருதானை நோக்கிப் பயணித்த ரயிலில்மோதுண்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக நாகொடை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் களுத்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் ‘காலைக்கதிர்’ சேவையைப் பெற்றுக்கொள்ள
076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## கோட்டாவிற்கான பதில்

தமிழர் அரசியலைப் பொறுத்தவரை நேற்று இரண்டு முக்கிய விடயங்கள் இடம்பெற்றன.

ஒன்று – நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து தனது அரசின் கொள்கை விளக்க உரையை ஜனாதிபதி ஆற்றியமை.

மற்றையது – தமிழ்த் தேசியக் கட்சிகள் (கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த கட்சிகள்) ஒன்றுபட்டுத் தயாரித்த – தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கின்ற ஆவணம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கையளிக்கப்படுவதற்காக தமிழ்க் கட்சித் தலைவர்களினால் நேரடியாக இந்தியத் தூதுவரிடம் கொழும்பில் வைத்து ஒப்படைக்கப்பட்டது.

நீண்ட இழுபறி, கலந்துரையாடல்கள், வாதப் பிரதிவாதங்களுக்குப் பின்னர் இந்தக் கடிதம் தயாரானது என்பது தெரிந்ததுதான்.

அந்தக் கடிதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஒப்பமிட முன்னர் – ஏனைய தலைவர்கள் யாவரும் கையெழுத்திட்ட நிலையில் – அது வெளியே கசிந்ததும் –

அந்த விடயம் பெரிய விவகாரமாக உருவெடுத்ததும்– கூடத் தெரிந்தவைதான். அப்படி கடித உள்ளடக்கம் வெளியே கசிந்த பின்னரும் அந்தக் கடிதத்தின் உள்ளடக்கத்திலே சில மாற்றங்களைச் செய்தாக வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒற்றைக் காலில் நின்று அந்த மாற்றங்களைச் செய்தது.

அந்த மாற்றங்களில், நேற்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உரை விளக்கத்தை ஒட்டி முக்கியத்துவம் பெறுவது கவனிக்கத்தக்கது.

அந்தக் கடிதத்தின் இரண்டாவது பத்தியில் அந்த விடயம் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் திருத்தப்பட்ட வாசகத்தின் சாரம் இதுதான்:

"எங்களின் சரித்திரபூர்வ வாழ்விடப் பிரதேசங்களில், எமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் விதத்தில் சமஷ்டிக் கட்டமைப்பிலான அரசியல் தீர்வில் நாங்கள் பற்றுறுதி கொண்டுள்ளோம். தமிழ் மக்கள் தாங்கள் பெரும்பான்மையினராக வாழும் வடக்கு, கிழக்கில் தொடர்ச்சியாக எமக்குத் தந்து வந்த ஒரே ஆணை இதுதான். அரசமைப்பு சீரமைப்புக்கு தொடர்ச்சியாக நாம் சமர்ப்பித்து வந்த எமது யோசனைத் திட்டமும் அதுதான்."

– இவ்வாறு இறுதி நேரத்தில் தமிழரசுக் கட்சியின் வலியுறுத்தலில் சேர்க்கப்பட்ட தமிழ் மக்களின் ஆணை பற்றிய வாசகம் முக்கியம் பெறுவதற்குக் காரணம் உண்டு.

வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் கொள்கை நிலைப்பாடு எதுவாக இருந்தாலும், அதனைத் தற்காலிகமாகத் தள்ளி வைத்து விட்டு, மக்களின் அன்றாட வாழ்வாதார தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தம்முடன் கைகோர்ப்பதற்கு முன்வருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பகிரங்க அழைப்பு விடுத்திருக்கின்றார் – நேற்றைய தமது உரையில்.

அந்த அழைப்பைத் தமிழ்த் தேசியப் பரப்பில் காலூன்றி நிற்கும் தமிழ் எம்.பிக்கள் பதின்மூன்று பேரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். நிராகரிப்பார்கள் என்பது நிச்சயம்.

அதற்கான தெளிவான காரணம், பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் அனுப்பியுள்ள ஆவணத்தில் தமிழரசுக் கட்சி கடைசி நேரத்தில் சேர்த்த வாசகத்தில் – மக்களின் ஆணையாகப் பொதிந்துள்ளமை கவனிக்கத்தக்கது.

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் யுத்தம் முடிந்த பின்னரும் தொடர்ச்சியாகக் கொடுத்து வந்த தெளிவான – உறுதியான – ஆணை எது என்பதை இந்த ஆவணத்தில் செய்யப்பட்ட திருத்தம் மூலம் தமிழ்க் கட்சிகள் உறுதிப்படுத்தி வெளிப்படுத்தியுள்ளன. கோட்டாவின் கோரிக்கையைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரிப்பதற்கான பதிலும் அடிப்படைக் காரணமும் அதிலேயே பொதிந்து கிடக்கின்றன.

## விடுதலைப் புலிகள் தமிழைக் காதலித்தமையால் அவர்கள் காலத்தில் கம்ப விழாக்கள் நடந்தன!

### தற்போது கிடையாது என கம்பவாரிதி ஜெயராஜ் ஆதங்கம்



விடுதலைப் புலிகள் தமிழைக் காதலித்தனர். அதனால் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் கம்பன் விழாக்களை வெகு விமரிசையாக நடத்தினோம். விடுதலைப் புலிகளின் காலத்துக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் தமிழுக்காக வேறு எந்த விழாக்களும் பெரிய அளவில் நடத்தப்படவில்லை என அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

யாழ்ப்பாணம் தமிழுக்கு பெயர் போன ஒரு பிரதேசம். பல்துறை அறிஞர்களையும் பல்துறை மகான்களையும் உருவாக்கிய பெருமை யாழ்ப்பாணத்துக்கு உரியது.

இவ்வாறு பல பெருமைகளை உடைய யாழ். மண் இன்றைய காலப்பகுதியில் பல தடுமாறல்களை எதிர்நோக்கிச் செல்வதாக அறிகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் முன்னர் இடம்பெற்ற மிகப்பெரிய தமிழ் விழாக்கள் மூன்றில் நான் பங்கெடுத்தேன். அவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் யாழ். மாநகரசபை தமிழுக்கு பெருமை சேர்க்கும் முத்தமிழ் விழாவை ஏற்பாடு செய்தமை மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## பீற்றர் இளஞ்செழியனுக்குப் பிணை வழங்கியது முல்லைத்தீவு நீதிமன்று!

**(சண்முகம் தவசீலன்)**

கடந்த 31 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பீற்றர் இளஞ்செழியனை இரண்டு லட்சம் பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் விடுவிக்க முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் நேற்று (செவ்வாய்க்கிழமை) உத்தர விட்டுள்ளது.

கடந்த 31.12.2021 அன்று போலி ஆவணங்கள் தயாரித்த குற்றச்சாட்டில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரும், வாலிபர் முன்னணி பொருளாளருமான பீற்றர் இளஞ்செழியன் முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய நிலையில் அவரை 04-01-2022 வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டிருந்தது. பின்னர் 04-01-2022 அன்று வழக்கு விசாரணைகளில் மீண்டும் இன்றுவரை (18-01-2021) விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டிருந்தது.

இன்னிலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பீற்றர் இளஞ்செழியன் சார்பில் மன்றில் ஆயரான சட்டத்தரணி எஸ்.தனஞ்சயன் பிணை விண்ணப்பம் செய்திருந்தார்.

இதனடிப்படையில் பீற்றர் இளஞ்செழியனை இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் விடுவிக்க முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதோடு வழக்கு விசாணைகள் 24.05.2022 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தனியார் பஸ் வழித்தடம் ஒன்றை வழங்குவதற்காக மாவட்ட செயலகக் கடிதத் தலைப்பில் கடிதம் ஒன்று அடிக்கப்பட்டு அதனூடாக குறிப்பிடப்பட்டுள்ள வங்கி கணக்கு ஊடாக பணப்பரிமாற்றங்களும் மேற்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த ஆவண தயாரிப்பு பணப்பரிமாற்றங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களுடனேயே பீற்றர் இளஞ்செழியன் உட்பட மற்றும் ஒருவரும் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிகேம்!

யாழ்ப்பாணம், ஜன. 19

நல்லூர் வடக்கு ஸ்ரீஐண சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.32 – 11.22 மணி வரை இடம்பெறவுள்ளது.

மகா கும்பாபிகே கர்மாரம்பம் இன்று புதன்கிழமை காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகியது. இதைத் தொடர்ந்து, காலை 6.45 மணிக்கு ஆலயத்தின் மேற்குப்புற வாசல் அலங்கார வளைவு திறப்பு விழாவும், கலாசார மண்டப புகுவிழாவும் இடம்பெறும்.

நாளை வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு 'பஞ்சதளநாயகன்' இறுவட்டு வெளியீட்டு விழா நடைபெறும். 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.

மறுநாள் கும்பாபிஷேக பெருவிழாவில் அனைவரையும் சுகாதார விதிகளைப் பின்பற்றி பங்கேற்குமாறு ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

## மத்தி அதிவேக நெடுஞ்சாலையில் 12 மணி நேரத்தில் 28 லட்சத்து 5 ஆயிரத்து 100 ரூபா வருமானம் ஈட்டல்

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டம் (அதுகல்புர நுழைவாயில்) 15 ஆம் திகதி அன்று ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அனுசரணையின் கீழ் பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

பாதை திறக்கப்பட்ட முதல் 12 மணி நேரத்தில் 28 லட்சத்து 5 ஆயிரத்து 100 ரூபா வருமானம் கிடைத்ததாக ஆளும் தரப்பு பிரதம கொறடா நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். மீரிகம முதல் குருநாகல் வரையிலான அதிவேக நெடுஞ்சாலையில் முதல் 12 மணித்தியாலங்களில் 13 ஆயிரத்து 583 வாகனங்கள் பயணித்துள்ளதுடன் விபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை. சனிக்கிழமை நள்ளிரவு முதல் ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணி வரை மீரிகமவி லிருந்து குருநாகல் வரை கெட்டுவான நுழைவாயில் வரையிலும், கெட்டுவானவிலிருந்து மீரிகம வரையிலும் பொதுமக்களுக்கு இலவசமாக பயணிக்க அனுமதிக்கப்பட்டதாகவும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# ஆப்கானில் அடுத்தடுத்து நிலநடுக்கம்
# இடிபாடுகளில் சிக்கி 26 பேர் பலி!



ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரண்டு நிலநடுக்கங்களால் நூற்றுக்கணக்கான வீடுகள், கட்டடங்கள் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளில் சிக்கி 26 பேர் பலியாகினர்.

துர்க்மெனிஸ்தான் எல்லையை ஒட்டிய பட்கிஸ் மாகாணத்தில் நேற்று உள்நாட்டு நேரப்படி மதியம் இரண்டு மணிக்கும் தொடர்ந்து இரண்டு மணி நேரங்கள் கழித்து 4 மணியளவிலும் நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

முதல் நிலநடுக்கம் 5.3 ரிக்டர் அளவிலும் இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு இரண்டாவது நிலநடுக்கம் 4.9 ரிக்டர் அளவிலும் பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பட்கிஸ் மாகாண தலைநகரான கலா-இ நாவில் இருந்து கிழக்கே 41 கிலோமீட்டர் தொலைவிலும், தென்கிழக்கே 50 கிலோமீற்றர் தொலைவிலும் இந்த நிலநடுக்கங்களின் மையப் பகுதிகள் இருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஆப்கானிஸ்தானை கடந்த ஒகஸ்ட் மாதம் நாட்டை தலிபான் கையகப்படுத்தியதன் பின்னர் அந்நாடு பெரும் பொருளாதார மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது. ஆப்கானுக்கான சர்வதேச உதவிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், வெளிநாடுகளில் உள்ள சொத்துகளும் முடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 26 பேர் பலியானதை ஆப்கான் அவசரகால விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் அவசர கால செயல்பாட்டு மையத்தின் தலைவர் முல்லா ஜனன் சாகே உறுதிப்படுத்தினார்.

அத்துடன், 700 க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாக அவர் கூறினார்.

# சீனாவில் பிறப்பு வீதம் தொடர்ந்தும் சரிவு!



சீனாவின் பிறப்பு விகிதம் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக சரிந்து, 2021 ஆம் ஆண்டில் புதிய சாதனையை எட்டியது.

மக்கள் தொகை குறைந்து வரும் நெருக்கடியை எதிர்கொண்டு தம்பதிகள் அதிக குழந்தைகளைப் பெற ஊக்குவிக்க அரசாங்கம் பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ள போதும் அந்த முயற்சிகளுக்கு பலன் கிட்டவில்லை.

உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடான சீனாவில் கடந்த ஆண்டு 10.62 மில்லியன் பிறப்புக்களே பதிவாகியுள்ளன. ஆயிரம் பேருக்கு 7.5 என்ற அடிப்படையிலேயே பிறப்பு வீதம் அமைந்தது.

சீனாவின் தேசிய புள்ளிவிவரவியல் அலுவலகத்தின் தகவல்களின்படி இது 1949 இல் கம்யூனிஸ்ட் சீனா நிறுவப்பட்டதிலிருந்து மிகக் குறைந்த பிறப்பு வீதத்தைக் குறிக்கிறது.

குறைந்த பிறப்பு வீதத்துடன் கடந்த ஆண்டின் இறுதியில் சீனாவின் மக்கள்தொகை 141.26 கோடியாக அதிகரித்துள்ளது. முந்தைய ஆண்டில் அந்த எண்ணிக்கை 141.20 கோடியாக இருந்தது.

இவ்வாறான நிலையில் கடந்த ஆண்டில் இயற்கையான சனத்தொகை வளர்ச்சி விகிதம் 0.034% ஆகக் குறைந்தது. 1959 முதல் 1961 வரையிலான காலப்பகுதியில் சீனாவில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்திற்குப் பிறகு பதிவான மிகக் குறைவான சனத்தொகை வளர்ச்சி வீதமாகுமாக இது உள்ளது. 1959 முதல் 1961 வரையிலான காலப்பகுதியில் சீனாவில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்தனர். இது சனத் தொகை வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

இந்நிலையில் தற்போது குழந்தை பெற்றுக் கொள்ளும் வயதுடைய பெண்களின் எண்ணிக்கையில் குறைவு, கருவுறுதலில் தொடர்ச்சியான சரிவு, குழந்தைப்பேறு மீதான அணுகுமுறையில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற காரணிகளின் கலவையால் பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது என சீனாவின் தேசிய புள்ளிவிபரவியல் பணியகத்தின் தலைவர் நிங் ஜிசே நேற்று திங்கட்கிழமை அரச ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இளைஞர், யுவதிகள் தாமதமாகத் திருமணம் செய்து கொள்வதும் குழந்தை பிறப்பு வீதம் குறைவதற்கான மற்றொரு காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சீனாவில் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை வெளியிடப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரம் கடந்த ஆண்டு மே முதலாம் திகதி வெளியிடப்பட்டது. இதில், கடந்த 1950 இற்குப் பிறகு மக்கள் தொகை வளர்ச்சி கடந்த பத்தாண்டில் மிகப்பெரிய சரிவை சந்தித்திருப்பது கண்டறியப் பட்டது.

சீனாவின் மொத்த மக்கள் தொகை 141.26 கோடியாகும். கடந்த 1976 முதல் 2016 வரை மக்கள் தொகையை கட்டுப்படுத்த சீனாவில் தம்பதியருக்கு ஒரு குழந்தைத் திட்டம் கடுமையாக கடைபிடிக்கப்பட்டது.

இதனால், பிறப்பு விகிதம் வெகுவாக குறைந்ததால் 2016 இல் இரண்டு குழந்தை பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. ஆனாலும், இதற்கு பெரிய அளவில் வரவேற்பு இல்லை. இதன் காரணமாக, இளம் வயதினர் குறைந்து முதியவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதால், சமூக, பொருளாதார, வேலைவாய்ப்பில் பல்வேறு எதிர்கால பிரச்னைகளைச் சந்திக்க வேண்டிய அபாயம் ஏற்படும் என சீனா உணர்ந்தது.

இதைத் தொடர்ந்து, 2 குழந்தைகளுக்குப் பதிலாக 3 குழந்தைகளை பெற்றுக் கொள்ளலாம் என சீன அரசு கடந்த ஆண்டு மே மாதம் அறிவித்தது. இது சீனாவின் மிகப்பெரிய கொள்கை மாற்றாகும்.

இப்புதிய திட்டத்தை அமுல்படுத்தும் வகையில் மக்கள் தொகை மற்றும் குடும்பக் கட்டுப்பாடு சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. இந்நிலையில் சீன தம்பதிகள் 3 குழந்தைகளை பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கும் விதமாக அவர்களுக்கு மானியங்கள், வரிக்குறைப்பு உள்ளிட்ட சலுகைகளை மாகாண அரசுகள் அறிவிக்க தொடங்கியுள்ளன.

சீனாவில் 20இற்கும் மேற்பட்ட மாகாணங்களில் மகப்பேறு விடுப்பு, திருமண விடுமுறையை நீடித்தல் மற்றும் தாய்மார்களைக் கவனித்து கொள்ள ஆண்களுக்கு விடுமுறை அதிகரிப்பது போன்ற சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது.



# இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடிய 7 பேர் சூடனில் சாவு

சூடானில் இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது இராணுவத்தினர் சரமாரியாக சுட்டதில் 7 பேர் பலியாகினர். மேலும் பலர் காயமடைந்தனர்.

சூடானில் இராணுவ ஆட்சிக்கு எதிராக தொடர்ச்சியாக மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை தலைநகர் கார்டூமில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு பேரணியாக சென்ற போது அவர்களை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறையை கையில் எடுத்துள்ளன என இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது. எனினும் ஜனநாயக எதிர்ப்பு போராட்டக்காரர்கள் இராணுவத்தின் குற்றச்சாட்டை மறுத்துள்ளனர். அமைதியான எதிர்ப்பாளர்களுக்கு எதிராக பாதுகாப்புப் படைகள் அதிக பலத்தை பயன்படுத்துகின்றனர் என அவர்கள் கண்டித்துள்ளனர்.

இதற்கிடையில் கடந்த திங்கட்கிழமை நடந்த கொடிய வன்முறைக்கு மத்தியில் சூடானில் உள்ள அனைத்துக் கட்சிகளும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என ஐ.நா. பாதுகாப்பு சபை 9 உறுப்பு நாடுகள் இணைந்து கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

2021, ஒக்ரோபர் 25 அன்று சூடானில் நடந்த இராணுவ சதிப்புரட்சி குறித்து எங்களின் தீவிர கவலையை நாங்கள் தெரிவிக்கிறோம் என இங்கிலாந்து, மெக்சிகோ, அல்பேனியா, பிரேஸில், காபோன், கானா, அயர்லாந்து மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் இணைந்து நேற்று வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15 உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்புச் சபை கூட்டத்திற்கு பிறகு வெளியிடப்பட்ட அறிக்கையில் வன்முறையைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் அமைதியாக ஒன்று கூடுவதற்கான உரிமைகள் மற்றும் கருத்துச் சுதந்திரம் உட்பட மனித உரிமைகளை உறுதிப்படுத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) வழக்கறிஞர் கரீம் கான் பங்கேற்றார்.

நடந்த வன்முறையை சூடானில் உள்ள ஐ.நா. தூதுக் குழுவும் கடுமையாகக் கண்டித்தது. போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் ஆயுதங்களை பிரயோகிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஐ.நா. தூதுக் குழு தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் இராணுவ சதிப்புரட்சியை அடுத்து சூடானில் போராட்டங்களில் ஈடுபட்டு வரும் 71 பேர் இதுவரை சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் சூடானில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை ஐ.நா மத்தியஸ்தர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# சென்னையில் மீண்டும் தீவிரமடையும் கொரோனா

## பாதிப்பு அதிகமுள்ள 387 தெருக்கள் மூடப்பட்டன

சென்னையில் கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதை கட்டுப்படுத்த மாநகராட்சி நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

15 மண்டலங்களில் தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், அடையார், அண்ணாநகர் ஆகிய மண்டலங்களில் தொற்று பரவல் அதிகமாக உள்ளது. இதனைக் கட்டுப்படுத்த நோய் அறிகுறி உள்ளவர்களை உடனடியாக சிகிச்சைக்கு உட்படுத்த தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா உறுதி செய்யப்பட்டவர்கள், தங்களது இருப்பிடங்களில் 7 நாள்கள் கட்டாயம் தனிமைபடுத்தப்படுகிறார்கள். அவர்களைக் கண்காணிக்கவும், மருத்துவ ஆலோசனை வழங்கவும் வைத்தியர்கள் குழு செயல்படுகிறது.

தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு உதவ களப்பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். கொரோனாத் தொற்று உறுதியானவர்களின் வீடுகளில் அடையாளப் படிவங்கள் ஒட்டப்படுகின்றன.

சென்னையில் தற்போது ஐம்பத்தெட்டாயிரம் பேர் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். 71 சதவீதம் பேர் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தற்போது தொற்றுப் பாதிப்பு அதிகம் உள்ள தெருக்களை தடுப்பு வேலிகள் அமைத்து மூடும் நடவடிக்கையும் தொடங்கியுள்ளது.

சென்னையில் 39,537 தெருக்கள் உள்ளன. இதில் 30,000 தெருக்களுக்கு மேலாக தொற்றுப் பாதிப்பு உள்ளவையாக அடையாளம் காணப்பட்டுள்ளன. தொற்று உள்ளவர்கள் அதிகமாக வசிக்கும் தெருக்கள் கட்டுப்பாட்டு பகுதிகளாக அறிவிக்கப்பட்டு மூடப்பட்டுள்ளன. அந்த தெருக்களில் வாகனங்கள் செல்லத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் குறித்து மாநகராட்சி நிர்வாகத் தலைவர் ககன்தீப்சிங் பேடி தெரிவிக்கையில், சென்னையில் தொற்று பரவலை தடுக்க பாதிப்புக்கு உள்ளானவர்கள் கண்காணிக்கப்படுகிறார்கள். வீட்டு தனிமையில் 41 ஆயிரம் பேர் உள்ளனர். 8 ஆயிரம் பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். தொற்று உறுதி செய்யப்பட்டவுடன் அவர்களை மாநகராட்சி சுகாதார பணியாளர்கள் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

45 வயதுக்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டு இருந்தால் அவர்களுக்கு வீட்டிலேயே மருத்துவ குழுவினர் ஒட்சிசன் அளவும், உடல் வெப்ப பரிசோதனையும் செய்து, மருந்து பெட்டகம் வழங்குகிறார்கள். அறிகுறி உள்ளவர்கள் அம்புலன்ஸ் மூலம் வீட்டில் இருந்து பரிசோதனை மையங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

வீட்டுத்தனிமையில் உள்ளவர்களை மருத்துவக் குழுவினர் தொலைபேசி மூலமாக பேசி ஆலோசனை வழங்குகிறார்கள். தினமும் 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் அழைப்புகளை அவர்கள் மேற்கொள்கிறார்கள். பரிசோதனை முடிவு வருவதற்குள்ளாக அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது.

வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுடன் வசிக்கும் உறவினர்கள் முறையாக முகக்கவசம் அணியாததால் தொற்று அதிகம் பரவுகிறது. 30 சதவீதம் பேருக்கு இதன் மூலமாகவே பாதிப்பு ஏற்படுகிறது. அதனால், வீட்டில் தனிமைப் படுத்தப்பட்டவர்களை இரண்டு முககவசம் அணிந்து உறவினர்கள் கையாளவேண்டும், என்று தெரிவித்துள்ளார்.

## நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை ஒத்திவைக்கக் கோரி உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது

தமிழகத்தில் கொரோனாவின் மூன்றாவது அலை தீவிரமாகி இருப்பதால் தற்போதைய சூழலில் நகர்ப்புற உள்ளூராட்சி தேர்தலை நடத்தக்கூடாது என சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசின் ஓய்வுபெற்ற வைத்தியர் நக்கீரன் என்பவர்தரப்பில் மூத்த வழக்கறிஞர் எஸ்.பிரபாகரன் மனுவைத் தாக்கல் முறையீட்டில் தெரிவித்துள்ளார்.

எனவே தேர்தலை ஒத்திவைக்க வேண்டுமென்ற கோரிக்கையுடன் தொடரப்பட்ட வழக்கை நாளை அல்லது நாளை மறுநாள் அவசர வழக்காக விசாரிக்க வேண்டுமென பொறுப்புத் தலைமை நீதிபதி அமர்வில் அவர் கோரிக்கை வைத்துள்ளார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் நாளை மறுதினம் அந்த மனுவை விசாரிப்பதாக தெரிவித்துள்




செய்துள்ளார். அப்போது, தற்போதைய சூழலில் தேர்தலை நடத்தினால் கொரோனா பாதிப்பு மிக மோசமான நிலையை எட்ட நேரிடும் என குறிப்பிட்ட அவர், நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை நடத்துவது தொடர்பாக அனைத்துக் கட்சிக் கூட்டம் இன்று நடைபெறும் நிலையில், தேர்தல் தொடர்பாக எந்த நேரத்திலும் அறிவிப்பு வெளியாக வாய்ப்பு உள்ளதாகவும் தனது ளனர்.

ஜனவரி 27ஆம் திகதிக்குள் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக அறிவிப்பு வெளியிட வேண்டுமென உச்ச நீதிமன்றம் கெடு விதித்து, மேயர் உள்ளிட்ட பதவிகளுக்கான ஒதுக்கீடுகளும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலை தள்ளி வைக்கக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



## பா.ஜ.கவில் இணைந்த முலாயம் சிங் யாதவின் மருமகள்
## உத்தரப்பிரதேச அரசியல் களத்தில் தொடரும் பரபரப்பு

இந்தியாவின் மிக பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 7 ஆம் திகதி வரை 7 கட்டங்களாக சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இந்தியா முழுவதும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ள இந்த தேர்தலில் ஆளும் பா.ஜனதா மற்றும் சமாஜ்வாடி கட்சிகளுக்கு இடையே கடும் போட்டி நிலவி வருகிறது.

தேர்தலுக்கு முன்பே பா.ஜனதா கட்சியில் இருந்து விலகிய சில அமைச்சர்களும் எம்.எல்.ஏக்களும் சமாஜ்வாடி கட்சியில் இணைந்து விட்டனர். இதனால், அம்மாநில அரசியலில் பரபரப்பான சூழ்நிலை உருவாகி உள்ளது.

இந்த நிலையில் உத்தர பிரதேச அரசியலில் திடீர் திருப்பமாக சமாஜ்வாடி கட்சியின் நிறுவுநர் முலாயம் சிங் யாதவின் மருமகள் அபர்ணா யாதவ் பா.ஜனதாவில் இணைந்துள்ளார்.

முலாயம் சிங் யாதவின் இளைய மகன் பார்திக் யாதவின் மனைவியான இவரது முடிவு சமாஜ் வாடி கட்சிக்கு பெரும் பின்னடைவாக இருக்கும் என கருதப்படுகிறது.

இவர் கடந்த 2017 ஆம் ஆண்டு சட்டசபைதேர்தலில்லக்னோகாண்ட் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியை தழுவியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## சர்வதேச பயணிகள் விமானங்களுக்கான தடை பெப்ரவரி 28 ஆம் திகதி வரை நீடித்து அறிவிப்பு

கொரோனாப் பரவலைத் தொடர்ந்து ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதால், கடந்த ஆண்டு மார்ச் 23 ஆம் திகதி முதல் உள்நாட்டு மற்றும் சர்வதேச பயணிகள் விமான சேவைகள் இந்தியாவில் நிறுத்தப்பட்டன. அதன்பின் கொரோனாத் தாக்கம் சற்று தணிந்த நிலையில், பல்வேறு கட்டுப்பாடுகளுடன் உள்நாட்டு விமான சேவை ஆரம்பமாகியது.

ஆனால், சர்வதேச விமான சேவை இன்னும் வழமையான நிலைக்குத் திரும்பவில்லை. சில குறித்த நாடுகளுக்கும், முன் அனுமதிபெற்ற விசேட விமானங்களுக்கும் மட்டுமே சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்படுகிறது.

சர்வதேச விமானங்களுக்கான தடை சூழ்நிலைகளுக்கு ஏற்ப நீடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், தற்போது இந்தியாவில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ளதால் சர்வதேச பயணிகள் விமானங்களுக்கான தடை பெப்ரவரி 28 ஆம் திகதி வரை நீடிக்கப்படுவதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

சர்வதேச சரக்கு விமானங்கள் மற்றும் அரசால் அனுமதிக்கப்பட்ட விமானங்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும் என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமக்கான உரிமைகளை வென்றெடுக்க முஸ்லிம் சமூகம் ஒன்றிணைய வேண்டும்

## இம்ரான் எம்.பி வேண்டுகோள்



இலங்கையில் வாழும் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுக்க முஸ்லிம் மக்கள் ஐக்கிய மக்கள் சக்தியோடு ஒன்றிணைய வேண்டும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் முஸ்லிம் சமூகத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த ஆட்சிக் காலத்தில் முஸ்லிம் சமூகம் பல்வேறு இன்னல்களையும் சவால்களையும் சந்தித்து வருகின்றது. பல இடங்களில் முஸ்லிம் சமூகத்தவர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றார்கள். இந்த விடயங்களை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் உறுப்பினர்களால் பேச முடியாது என்பது நாமறிந்த உண்மையாகும். முஸ்லிம்களின் உரிமையைப் பெற்றுத் தருவோம் என்று ஆரம்பிக் கப்பட்ட முஸ்லிம் கட்சிகள் உரிமைக் கோஷத்தை முன் வைத்து வாக்குகளைப் பெற்று இன்று வெறும் அட்ப சலுகைகளுக்காக அரசாங்கத்திடம் சரணாகதி அடைந்து விட்டன. சலுகைகளை மட்டும் கேட்டுப் பெற்றுக் கொண்ட அவர்களால் முஸ்லிம் சமூகத் தின் உரிமைகளைப் பற்றிப் பேசமுடி யாது என்பதையும் நாம் கண்டுள்ளோம்.

இலங்கையில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற மாகாணம் கிழக்கு மாகாணம். முஸ்லிம்களின் அடையாளத்தைச் சொல்லும் பிரதான மாகாணம் இது. வேறு கட்சிகளில் போட்டியிட்ட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 6 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அரசுக்கு ஆதரவு வழங்குகின்றனர். கிழக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாண பாலர் பாடசாலைப் பணியக பணிப்பாளர்களுள் எந்த ஒரு முஸ்லிம் பிரதிநிதியும் இல்லை. இவற்றைத் தட்டிக் கேட்கவோ அல்லது முஸ்லிம் பணிப்பாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவோ அரசுக்கு ஆதரவு வழங்கும் இந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்க ளால் முடியவில்லை.

கடந்த எமது நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இந்தப் பாலர் பாடசாலை பணியகத்திற்கு தவிசாளர்களாக முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இதற்கு மேலதிகமாக பணிப்பாளர் சபை உறுப்பினர்களாகவும் முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் இந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையில் எந்த ஒரு முஸ்லிமும் இல்லை என்ற ஆதங்கத்தை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் எம்மோடு பகிர்ந்து கொள்கின்றனர்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் கடந்த 4 மாதங்களாகத் திட்டமிடல் பணிப்பாளர் பதவி வெற்றிடமாக உள்ளது. இதனை நிரப்பத் தகுதியான உத்தியோகத்தர்களாக முஸ்லிம் உத்தியோகத்தர்களே இருக்கின்றனர். இந்த ஒரே காரணத்திற்காக இந்தப் பதவி இதுவரை நிரப்பப்படாமல் உள்ளது.

திருகோணமலை மாவட்டத்ததைச் சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்த அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி வருகின்றார். ஆனால் அவரால் இந்த வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

ஏனெனில் இந்தப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்ட சலுகைகளுக்குள் இது போன்ற உரிமை சார்ந்த விடயங்கள் இல்லை. அவர்கள் கேட்டதையெல்லாம் இந்த அரசு கொடுத்து விட்டது. இனி எதுவும் கேட்க முடியாது. அதனால் தான் இவர்களால் இது போன்ற விடயங்களைப் பற்றி கவனம் செலுத்த முடியாமல் உள்ளது. பேச முடியாமல் உள்ளது.

இந்த அரசாங்கத்தின் உறுப்பினர்களாகச் செயற்படும் இவர்களால் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைப் பெற்றுத்தர முடியாது என்பதற்கு இவை நல்ல உதாரணங்கள். இப்போது முஸ்லிம் உரிமை சார்ந்த விடயங்களை ஐக்கிய சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள தான் பேசி வருகின்றார்கள். முஸ்லிம் கட்சிகள் செய்ய வேண்டிய இந்தப் பணியை ஐக்கிய மக்கள் சக்தி செய்கின்றது.

எனவே, இனியும் இந்த முஸ்லிம் கட்சிகளை நம்பி முஸ்லிம் சமூகம் ஏமாந்து விடக்கூடாது. நமது சமூகம் ஏனைய சமூகத்தவரைப் போன்று இந்த நாட்டில் தலைநிமிர்ந்து வாழ அனைத்து முஸ்லிம்களும் ஐக்கிய மக்கள் சக்தியோடு ஒன்றிணைய வேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமனம்



கல்முனை பிராந்திய சுகாதாரசேவைகள்பணிப்பாளராக வைத்தியர் ஐ.எல். எம்.றிபாஸ் இன்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய வைத்தியர் ஜி. சுகுணன் நேற்று மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவை பணிப்பாள ராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே வைத்தியர் றிபாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். காத்தான்குடியினைச் சேர்ந்த இவர் தற்போது பொத்துவில் ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகராக பணியாற்றுக்கின்மை குறிப்பிடத்தக்கது.

இப் பதவியேற்பு நிகழ்வில் முன்னாள் கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஜி.சுகுணன் உட்பட வைத்திய அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# வீதி கையளிப்பு நிகழ்வு



மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் கொக்கட்டிச்சோலை மற்றும் அம்பிளாந்துறை பிரதான வீதியில் உடைந்த நிலையில் காணப்பட்ட பாலம் தொடர்பாக பிரதேச மக்கள் விடுத்த வேண்டுகோளின் கீழ் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் முயற்சியால் 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக புனரமைக்கப்பட்டு 16 ஆம் திகதி மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது .

இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் – கடந்த அரசாங்க காலத்தின்போது வட கிழக்கு மாகாணங்களில் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள கிராமங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பில் புறக்கணிக்கப்பட்டு வந்தது. குறிப்பாகத் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு வீதி,பாலம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் புறக்கணிக்கப்பட்டது. ஆனால் அந்த நிலை தற்போது இல்லை ஜனாதிபதியின் நாட்டை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தின் கீழ் எமது நாட்டின் ஒன்பது மாகாணங்களுக்கும் சரிசமமாக நிதி பகிர்ந்தளிக்கப்பட்டு பின்தங்கிய பிரதேசங் களில் உள்ள கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் பாரிய அளவில் அபிவிருத்தி செய்யப்படுகின்றது.

இதில் கிராமங்களின் உள்ளக வீதிகள், பிரதான வீதிகள், பாலங்கள் ,நீர்த்தேக்கங்கள், நீர் வழங்கும் வடிகால் திட்டங்கள் , கிராமங்களை சார்ந்த நகர கடைத் தொகுதிகள் அனைத்து சமூகத்தினரும் பயன்பெறும் வகையில் அபிவிருத்தி செய்யப்படுகின்றது. இவ்வனைத்து வேலைத்திட்டங்களும் கிராமங்களை அபிவிருத்தி செய்வதையே இலக்காக கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது என்றார்.

# மட்டக்களப்பில் வயல் வெளியில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது

மட்டக்களப்பில் வயல்வெளியிலிருந்து நேற்று செவ்வாய்க்கிழமை மாலை சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு காவல்துறை பிரிவிற்குட்பட்ட பொன்னாங்கேணிச்சேனை பிரதேசத்தில் உள்ள வயல்வெளியில் இருந்து முதியவர் ஒருவர் சடலமாகமீட்கப்பட்டுள்ளர்எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர். நாவற்காடு, மாவடித்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 76 வயதுடைய தம்பியப்பா சுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் பொன்னாங்கேணிச் சேனை பிரதேசத்தில் வாடியமைத்து அங்கிருந்து தனது வயல் மற்றும் மாடுகளை நீண்டகாலமாக பராமரித்து வருவதாகவும் இடையிடையே தனது வதிவிடத்திற்கு சென்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று உறவினர் ஒருவர் குறித்த பிரதேசத்திற்கு சென்றவேளை வாடிக்கு அருகில் உள்ள வயல் பிரதேசத்தில் உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அரசியல் தீர்வு பேச்சுக்கு ஜனாதிபதி கோட்டாபய அழைப்பு விடுப்பார் என்ற எதிர்பார்ப்பு பொய்த்தது!

## ஒருசில ஊடகங்களும் அதை நம்பிய அரசியல் தரப்புகளும் ஏமாற்றமடைவு!

### மனோ கணேசன் எம்.பி. காட்டம்



அரசியல் தீர்வுக்கான பேச்சு நடத்த தான் தயார்' என்ற ஒரு நிலைப்பாட்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று (செவ்வாய்க்கிழமை) தன் கொள்கை உரையில் அறிவிப்பார் என்று கடந்த சில நாள்களாக ஒருசில ஆங்கில, தமிழ், சிங்கள ஊடகங்களிலும், ஒருசில தமிழ் அரசியல் தரப்புகளாலும் வெளியிடப்பட்ட ஊகங்கள் இன்று பொய்த்தன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அடுத்த மூன்று வருடங்களுக்கான தனது அரசாங்கத்தின் கொள்கை நோக்கை விளக்கி நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய நீண்ட உரையில், தேசிய இனப்பிரச்சினையை, பொருளாதார பிரச்சினையாக மட்டுமே பார்க்கும் தனது கொள்கை மாறவில்லை என்பதைத் தெளிவாக கோடிட்டுக் காட்டினார்.

ஜனாதிபதியின் உரை நிறைவு பெற்ற பின், முன்னாள் எதிர்கட்சி தலைவரும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் எம்.பி. மிகவும் சலிப்புடனும், ஏமாற்றத்துடனும் இருந்ததை, அவருக்கு சமீபத்தில் அமர்ந்திருந்த நான் அவருடன் சற்று உரையாடிய போது அவதானித்தேன். அது எனக்கு மிகுந்த மனக் கவலையைத் தந்தது.

'ஜனாதிபதி இனப்பிரச்சினையை பற்றி ஒரு வார்த்தையும் கூறாமல், கடலுக்கு அடியில் அமைக்கத் திட்டமிடும் டிஜிற்றல் தொழில்நுட்ப கேபிள்களைப் பற்றி அதிகம் பேசினார். உங்கள் இனப்பிரச்சினையையும் அங்கே கடலுக்கு அடியில் புதைக்க போகிறாரோ' என அவ்வேளை என்னுடன் உரையாடிய முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேலியாகத் தெரிவித்தார், என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியின் சிம்மாசன உரையை அடுத்து கருத்துக் கூறிய மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு–

'அரசியல் தீர்வுக்கான பேச்சு நடத்தத் தான் தயார்' என்ற ஒரு நிலைப்பாட்டை ஜனாதிபதி இன்று தன் கொள்கை உரையில் அறிவிப்பார் என்று கடந்த சில நாள்களாக வெளியிடப்பட்ட ஊகங்கள் பொய்த்தவை. கொழும்பின் ராஜதந்திர சமூகம் தவறாமல் வாசிக்கும் பிரபல வார இறுதி ஆங்கில பத்திரிக்கையின் அரசியல் ஆரூடம் பொய்த்தது.

அப்பத்திரிகை தனது ஏற்புடைமையை இழந்தது என்றும், அதை நம்பிய ஒருசில தமிழ் அரசியல்வாதிகளும் ஏமாந்தனர் என்றும், சற்று முன் என்னுடன் உரையாடிய பிரபல மேற்கு நாட்டு ராஜதந்திரி சொன்னார்.

'தேசிய இனப்பிரச்சினை' இருப்பதாக ஏற்க ஜனாதிபதி தன் உரையில் தெளிவாக மறுக்கிறார். இந்நாட்டில் நிலவும் பிரச்சினைகளை 'பொருளாதார' பிரச்சினையாக மட்டுமே அவர் இறுக்கமாகப் பார்க்கிறார். மக்களுக்கு குடிதண்ணீர், நீர்பாசனம், வீடுகள், நெடுஞ்சாலைகள் ஆகிய வசதிகளை வழங்குவதே, நல்லிணக்கத்துக்கு அடிப்படை என்பதுவே தனது அரசாங்கத்தின் நல்லிணக்க கொள்கை என ஜனாதிபதி கூறி முடித்தார். மலையகத் தமிழர்கள், முஸ்லிம் ஆகிய இலங்கையின் சிறுபான்மை மக்கள் எதிர்நோக்கும் விசேட பிரச்சினைகள் பற்றிய தீர்வுகள் தொடர்பிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அடுத்த மூன்றாண்டுக்கான கொள்கை உரையில் எதுவும் கூறப்படவில்லை.

அதிகார பரவலாக்கல், 13 ஆம் திருத்தம் ஆகிய விவகாரங்கள் பற்றி ஜனாதிபதி ஒரு வார்த்தையும் கூறாமல் இந்நாட்டு தமிழ் பேசும் மக்களை ஏமாற்றி உள்ளார் என நான் நினைக்கிறேன். வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தனது அரசால் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இருந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட எம்.பிக்கள் 'ஒத்துழைப்பு' வழங்க வேண்டும் என்பதுவே அவரது அதிகபட்ச கோரிக்கையாக இருந்தது.

ஜனாதிபதியின் உரை நிறைவு பெற்ற பின், முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் எம்.பி. மிகவும் சலிப்புடனும், ஏமாற்றத்துடனும் இருந்தமையை, அவருக்கு சமீபத்தில் அமர்ந்திருந்த நான் அவருடன் சற்று உரையாடிய போது அவதானித்தேன். அது எனக்கு மிகுந்த மனக்கவலையைத் தந்தது.

'ஜனாதிபதி இனப்பிரச்சினையை பற்றி ஒரு வார்த்தையும் கூறாமல், கடலுக்கு அடியில் அமைக்க திட்டமிடும் டிஜிற்றல் தொழில்நுட்ப கேபிள்களைப் பற்றி அதிகம் பேசினார். உங்கள் இனப்பிரச்சினையையும் அங்கே கடலுக்கு அடியில் புதைக்க போகிறாரோ' என அவ்வேளை என்னுடன் உரையாடிய முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேலியாகத் தெரிவித்தார்.

அதேவேளை, தான் நியமித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத குழுவால் எழுதப்படும் புதிய அரசமைப்பிற்கான வரைவை தனது அமைச்சரவையில் சமர்ப்பித்து, அதன்பின் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்க முடிவு செய்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறினார். இந்த புதிய அரசமைப்புவரைவில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது கானல் நீராகவே இருக்கும் என்பதை ஜனாதிபதியின் உரை கோடிட்டுக் காட்டுவதாகவே நான் நினைக்கிறன். – என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.



# 'எண்ணெய்த் தாங்கிகள் மீண்டும் நாட்டுக்கு' ஆளுந்தரப்பிற்கு தெளிவுபடுத்திய கம்மன்பில!

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று(செவ்வாய்கிழமை) ஆரம்பமானது.

ஜனாதிபதியால் எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கான அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் முன்வைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து 2022 ஆம் ஆண்டின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கூட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்ற குழு அறை 01 இல் இடம்பெற்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கொள்கை பிரகடனம் தொடர்பிலான ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தை இன்று மற்றும் நாளை ஆகிய இரு தினங்கள் நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலர் விவாதத்தின் போது கருத்துத் தெரிவிக்கத் தயாராகின்றமையால் 21ஆம் திகதியும் விவாதத்துக்காக ஒதுக்குமாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இதன்போது பிரதமரிடம் கோரிக்கை விடுத்தார்.

அதற்கமைய சபாநாயகருக்கு எடுத்துரைத்து 21 ஆம் திகதியையும் விவாதத்துக்காக ஒதுக்கிக் கொள்ளுமாறு பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

'எண்ணெய் தாங்கிகள் மீண்டும் நாட்டிற்கு' எனும் தொனிப்பொருளில் திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பிலான ஒப்பந்தம் குறித்து வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெளிவுபடுத்தினார்.

குறித்த கூட்டத்தில் அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பசில் ராஜபக்ஷ, ஜீ.எல்.பீரிஸ், நிமல் சிறிபால த சில்வா, விமல் வீரவன்ஸ, மஹிந்த அமரவீர உள்ளிட்ட அமைச்சரவை அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள், ஜனாதிபதியின் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு செயலாளர் ஷானிகா கொபல்லவ, பிரதமரின் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு செயலாளர் பிரியந்த ரத்நாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# பிரியந்த குமாரவின் குடும்பத்தினருக்கு 10 வருடங்களுக்கான சம்பளம் வழங்கல்

கடந்த ஆண்டு டிசெம்பரில் சியால்கோட்டில் ஒரு கும்பலால் அடித்துக் கொலை செய்யப்பட்ட இலங்கைப் பிரஜை பிரியந்த குமாரவின் குடும்பத்துக்கு 10 வருடங்களுக்கான முதல் சம்பளத்தை பாகிஸ்தான் நிறுவனம் வழங்கியுள்ளது.

அதன்படி ராஜ்கோ இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தால் முதல் சம்பளமான 1,667 அமெரிக்க டொலர் இலங்கையில் உள்ள பிரியந்த குமாரவின் மனைவியின் வங்கி கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் பிரதமரின் அரசியல் தொடர்பு சிறப்பு உதவியாளர் டாக்டர் ஷாபாஸ் கில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் பதிவிட்டுள்ள டுவிட்டர் பதிவில்–

1,667 அமெரிக்க டொலர் முதல் சம்பளத்துடன் ஒரு லட்சம் அமெரிக்க டொலர் மதிப்புள்ள நிதி, பிரியந்த குமாராவின் மனைவியின் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதாகக் கூறினார். சியால்கோட்டில் உள்ள வணிக சமூகம் இறந்தவரின் குடும்பத்துக்காக ஒரு லட்சம் அமெரிக்க டொலர்களை திரட்டியதாகவும், பிரியந்த குமாரவின் சம்பளத்தை அவரது மனைவிக்கு தொடர்ந்தும் அனுப்புவதை உறுதிசெய்துள்ளாகவும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் கூறியுள்ளார்.

# மரக்கறிகளின் விலை குறைவடைந்துள்ளது

## வர்த்தக அமைச்சர் பந்துல கூறுகிறார்

மரக்கறிகளின் விலை குறைந்துள்ளது என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். நாட்டில் மரக்கறிகளின் விலை அதிகரித்ததைத் தொடர்ந்து, பொதுமக்கள் பருப்பு மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றை அதிகளவாக கொள்வனவு செய்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக மரக்கறிகளின் விலைகள் சடுதியாக குறைந்துள்ளன என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.01.2022இல் வெளியிடப்பெற்றது.